

## யாருக்கு நோய் வரலாம்?

- TB-யால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் வாழ்ந்த அல்லது நேரத்தை செலவிட்டவர்கள்
- மருத்துவ நிலை ஒன்று உள்ளவர்கள் அல்லது நோயெதிர்ப்பு சக்தியை பாதிக்கும் மருத்துவ சிகிச்சையை மேற்கொண்டுவருபவர்கள்
- இளம் குழந்தைகள்
- TB அதிகம் உள்ள நாடுகளில் பிறந்தவர்கள் அல்லது அங்கு வாழ்ந்தவர்கள்

## நான் என்ன செய்ய வேண்டும்?

- உள்ளூர் TB கிளினிக் அல்லது உங்கள் குடும்ப வைத்தியரை பார்க்கவும்
- மார்பு ‘எக்ஸ்-ரே’ எடுக்கவும்
- நெஞ்சு சளியின் மாதிரி ஒன்றைப் பரிசோதனைக்காகக் கொடுக்கவும்

**TB கிளினிக்குகளில் TB பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் அனைவருக்கும் இலவசம்**

**மேலதிக தகவல்களுக்கு health.nsw.gov.au -விற்குச் செல்லுங்கள்**

பிப்ரவரி 2022 © NSW Health. SHPN (HP NSW) 220162

NSW Health

NSW GOVERNMENT

# காசநோய் (TB)



குடும்பங்களுக்கும் சமூகத்திற்குமானது

## TB என்றால் என்ன?

TB என்பது TB பாக்டீரியா அல்லது கிருமிகளால் ஏற்படுகின்ற ஒரு தொற்றாகும்

TB காற்றின் மூலம் பரவுகிறது

TB சிறப்பு நோய் எதிர்ப்பு மருந்து மூலம் குணப்படுத்தப்படுகிறது



## TB -இன் அறிகுறிகள் பின்வருமாறு:

2 வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இருமல்

சளி அல்லது இரத்தத்துடனான இருமல்

காய்ச்சல், குளிர் அல்லது இரவு நேரத்தில் வியர்த்தல்

விரைவாக உடல் எடை குறைதல்

எப்போதும் சோர்வாக இருக்கும் உணர்வு

பசியிழப்பு

கட்டிகள் அல்லது வீக்கம் அல்லது வலி

## மறைந்திருக்கும் அல்லது ‘உறங்கும்’ TB

TB கிருமிகள் உங்களை நோய்வாய்ப்படுத்தாமல் உங்கள் உடலில் செயலற்றது போல் இருக்கலாம்.

உறங்கும் TB கிருமிகளை உங்களால் மற்றவர்களுக்குப் பரப்ப முடியாது

உறங்கும் TB திடீரெனத் தோன்றி உங்களை நோயுறச் செய்யலாம்

TB-யைக் கண்டறிவதற்கான தோல் பரிசோதனை அல்லது இரத்தப் பரிசோதனை மூலம் உறங்கும் TB-யைக் கண்டறிய முடியும்

உறங்கும் TB-க்கு சிறப்பான நோய் எதிர்ப்பு மருந்து கொடுப்பதன் மூலம் TB கிருமிகளை விழிப்படையாமல் இருக்கச்செய்யலாம்.